Vol. 1 No. 1 பூ 1 மலர் 1

யூன் 14, 1998 – யூலை 14, 1998

IRAVI மாதமொருமுறை

ஆசிரியர்:வ.ந.கிரிதரன்

Chief Editor: V.N.Giritharan

Published by WEBCOM COMMUNICATIONS 476 Parliament street, suite 201, Toronto, Ontario M4X 1P2 Tel: (416) 924-6456

இலவசம்

*சிறிலங்காப் படையினரின் வெறியாட்டம் அப்பாவித் தமிழர்கள் பலி. *யாழ் மாநகரசபையின் புதிய மேயராக சிவபாலன் நியமனம் *ஜெயலலிதா ஒரு வீராங்கனை ராமதாஸ் பாராட்டு

சிறிலங்காப் படையினரின் வெறியாட்டம்

சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரு Kfir ஜெட் விமானங்கள் முல்லைத் தீவு மாவட்டத்தில் உள்ள சுதந்திரபுரம் பகுதியில் பாரிய குண்டுத் தாக்குதல்களை நடாத்தின. அதனைத் தொடர்ந்து ஆனையிறவு மற்றும் அதனையண்டியுள்ள ஏனைய முகாம்களிலிருந்து ஏற்கனவே விமானக் குண்டுத் தாக்குதலகள் நடாத்தப் பட்ட பகுதிகள் மீது பலத்த பீரங்கித் தாக்குதல்கள் நடாத்தப் பட்டன. இதில் 20 அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப் பட்டுள்ளனர். மேலும் பலர் படுகாயங்களிற்குள்ளாகி வன்னி மாவட்டத்திலுள்ள பல்வேறு ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் மட்டும படுகாயங்களிற்குள்ளான 40 தமிழர்கள் போதிய படுக்கைககள் இல்லாத நிலையில் நிலத்தில் படுக்க வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் 6 தமிழர்களின் நிலை கவலைப் படும்படியானதாகவிருக்கின்றது. வன்னி மாவட்ட ஆஸ்பத்திரிகளெல்லாம் போதிய படுக்கைகள், பாண்டேஜ்கள், மற்றும் நோய் தடுப்பு மருந்துகளற்று பெரும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளன. இத் தகவல்களை புலிகளின் லண்டன் தலைமை அலுவலகம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கின்றது.

யாழ் மாநகரசபையின் புதிய மேயராக சிவபாலன் நியமனம்

யாழ் மேயராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்ட ஆலோசகர் சிவபாலன் தெரிவு செய்யப் பட்டுள்ளார். முன்னால் யாழ் மேயர் சறோஜினி யோகேஸ்வரன் அண்மையில் சுட்டுக் கொள்ளப் பட்டதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்தையடுத்தே புதிய மேயராக திரு சிவபாலன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதே சமயம் யாழ் உதவி மேயர் தம்பாப்பிள்ளை திருநாவுக்கரசு யாழ் நகரில் நடப்பது இராணுவ ஆட்சியே தவிர சிவில் நிர்வாகமல்ல எயக் காரணம் காட்டி பதவியை இராஜினாமா செய்துள்ளார். இதற்கிடையில யாழ் மாநகரசபையில் அங்கம் வகிக்கும் புளட்டின் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னனியினர் கூட்டணிக்கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவிருப்பதாக அறியப் படுகின்றது.

பாக்கிஸ்தான், இந்தியாவிற்கான G–8 நாடுகளின் கடன் உதவிகள் ரத்து

— லண்டன் —

உலகின் வலிமை வாய்ந்த அபிவருத்தியடைந்த G–8 நாடுகளான கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மனி, யப்பான், இத்தாலி, ருஷ்யா ஆகியவற்றிற்கிடையில் நிகழ்ந்த சந்திப்பில் அண்மையில் அணுகுண்டுப் பரிசோதனைகள நடாத்தியதற்காகப் பாக்கிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளிற்கு எதிர் காலத்தில் மனிதாபிமான ரீதியிலான கடன்கள் தவிர ஏனைய கடன் உதவிகள் அளிக்கப் பட மாட்டாதென முடிவெடுக்கப் பட்டுள்ளது. சகல விதமான அணுவாயுதப் பரிசோதனைகளையும் நிறுத்துமாறும, அணுவாயுதங்களை ஏவுகணைகளில் பொருத்துவதை நிறுத்தும் படியும் மேலும் அவை வேண்டின்ளன. அத்துடன் அவை இரு நாடுகளையும் அவற்றிற்கிடையிலான பிரச்சனைகளைக் குறிப்பாக காஷ்மீர் பிரச்சினையை ஆராய்ந்து தீர்க்கும்படி வேண்டியுள்ளன.

சூடானில் மீண்டும் அடிமை வியாபாரம்

— மலுவல் கொன், சூடான் —

சூடானின் தெற்குப் பகுதியான டின்காவிலிருந்து ஆயிரக்கணக்கான பெண்களும் குழந்தைகளும் கடத்தப்பட்டு வட சூடானில் அடிமைகளாக விற்கப் படுவதை **Toronto Star** அம்பலப் படுத்தியுள்ளது. கிறிஸ்த்தவ மதப் பிரசாரகரான John Eibner என்பவர் $17000 அமெரிக்க டாலர்களிற்கு 235 அடிமைகளை மீட்டதாக அப்பத்திரிகை கட்டுரை வெளியிட்டுள்ளது. அரசியல் விமர்சகர்கள் இவ்வடயத்தில் சூடான் அரசின் மெத்தனப் போக்கைக் கண்டித்துள்ளார்கள். அத்துடன் அவர்கள் சூடான் அரசு அதன் நட்புப் படைகளான முஸ்லீம் படையினர் மற்றும் ஏனைய படைப் பிரிவினரை அடிமை வியாபாரம் செய்யத் தூண்டுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

இந்தியா பாக்கிஸ்தானுடன போரை விரும்பவில்லை

அண்மையில் டோக்கியோவில் கியுபா செய்தி நிறுவனம் ஒன்றிற்களித்த பேட்டியில் இந்தியா பாக்கிஸ்தானுடன போரை விரும்பவில்லையென இந்தியப் பிரதமர் வாஜ்பாஜ் கூறியுள்ளார். காஷ்மீர் உட்பட சகல பிரச்சனைகளும் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதையே இந்தியா விரும்புகின்றது என்று கூறிய அவர் எந்த ஒரு மூன்றாவது நாடொன்றின் தலையீட்டையும் இந்தியாவரவேற்காதென்றும் வலியுறுத்தியுள்ளார். சீனாவுடனும் இத்தகையதொரு நிலைப் பாட்டையே இந்தியா விரும்புகின்றதென்றும் அவர் மேலும் கூறியுள்ளார். இதற்கிடையில் இந்தியா . பாக்கிஸ்தானிற்கிடையிலான பேச்சு வார்த்தைகளில் சீனாவையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற அமெரிக்க அதிபா பில் கிளிண்டனின் ஆலோசனையை இந்தியா நிராகரித்து விட்டது.

ஜெயலலிதா ஒரு வீராங்கனை. ராமதாஸ் பாராட்டு

ஈழத் தமிழர் பிரச்சனையில் தீர்வு வேண்டி அ.தி.மு.க தோழமைக் கட்சிகள் பிரதமர் வாஜ்பாஜ்ஜிடம் கொடுத்த மனுவில் கையெழுத்திட்டதன் மூலம் செல்வி ஜெயலலிதாவிற்கு உலகெங்கும் வாழும் தமிழர்கள் நன்றி கூறுவார்களெனவும் அவா ஒரு வீராங்கனையென இதன் மூலம் நரூபித்துள்ளாரெனவும் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ் கூறியுள்ளார். ஈழத்தமிழர் பிரச்சினையைக் குறுகிய அரசியல் லாபங்களிற்காகப் பாவிக்க வேண்டாமெனவும் அவர் வேண்டியுள்ளார். இதற்கிடையில் தி.மு.க அரசை பதவி நீக்கம் செய்யும் வரை பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்யப் போவதாக அ.தி.மு.க பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர். தமிழகத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு சீர் குலைந்து விட்டதெனவும் , பாக்கிஸ்தானின் உளவுப் படை தமிழகத்தில் ஊடுருவத் திமுக அரசு காரணமாகி விட்டதெனவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

*அன்பான வாசகர்களே உங்கள் ஆக்கங்களை கதையோ, கட்டுரையோ அல்லது கவிதையோ எதுவாயினும் இரவிக்கு அனுப்பி வையுங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்.

அடுத்த இரவி யூலை 14, 1998 வெளிவரும். கேட்டு வாங்குங்கள்.

வெற்றியின் இரகசியங்கள்


அ.ந.கந்தசாமி

அ.ந.கந்தசாமி நினைவுச் சிறப்பிதழ்

வாழ்க்கையில் முன்னேற வாசிக்க வேண்டிய கட்டுரைத் தொடர்.

1. இன்பம் என்பது என்ன?

இவ்வுலகில் மனிதராகப் பிறந்த எவரிற்கும் ஒரே ஒரு கனவு பொதுவாயிருக்கின்றது. அந்தக் கனவு தானென்ன? உலகத்தில் காணப்படும் இன்பங்களிலே தாம் தமக்குரிய பங்கைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதே அது. ஒரு சிலர் இதை வாய் விட்டுச் சொல்வார்கள். மற்றும் சிலர் இதைப் பேச மாட்டார்கள். ஆனாலிது மனித குலத்திற்குப் பொதுவான ஆசையென்பதில் சந்தேகமில்லை. ஆண், பெண், அலி என்ற பேதம் இதில் கிடையாது. இன்பமே மனித வாழ்க்கையின் குறிக்கோள். அதை அடைவதே வாழ்க்கையின் வெற்றி.

பிறப்பதும் வாழ்வதும் சாவதும் சகலருக்கும்

> "கவிதை,சிறுகதை,நாடகம்,நாவல்,இலக்கியம்,விமர்சனம் இவ் ஆறு துறைகளிலும் புலமையும் ஆற்றலும் மிக்கவர் ஈழத்தின் முற்போக்கு இலக்கியத்தின் முன்னோடி அறிஞர் அ.ந.கந்தசாமி அவர்கள்."

பொதுவானது. இதில் நமக்குப் பிறப்புப் பற்றி நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. அது நமது சக்திக்கு உட்பட்டதல்ல. ஆனால் ,

பிறந்து பிரெஞ்சு ராணுவத்தில் ஒரு சாதாரணச் சிப்பாயாகச் சேர்ந்து படிப்படியாக அவன் தளகர்த்தனாகி நாளடைவில் நாட்டின் மன்னனாகி முடிவில் ஐரொப்பாவின் பெரும் பகுதிக்குச் சக்கரவர்த்தியுமாகியவன் இவன். சரித்திரம் ஒருக்கால் அவன் அடைந்த வெற்றிகளை , நடத்திய போராட்டங்களை, புகுத்திய சட்டங்களை மறந்தாலும் அவன் கூறிய ஒரு வசனத்தை மட்டும் மறக்காது. அவ்வொரு வசனத்தில் அவன் அது வரை பெற்ற வாழ்க்கையின் அனுபவம் முழுவதும் தோய்ந்து கிடப்பதோடு ஒவ்வொருவன் உள்ளத்திலும் தன்னம்பிக்கையைச் சுடர் விடச் செய்யும் சக்தியும் பொதிந்து கிடக்கின்றது. அவ் வசனத்தை வாழ்க்கையில் வெற்றியடைய விரும்பும் ஒவ்வொரு மனிதனும், ஆணும், பெண்ணும் தன் உள்ளத்தில் சிலை எழுத்துப் போல் செதுக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

அசாத்தியம் என்ற சொல் என் அகராதியில் கிடையாது.

இது தான் அந்த வசனம். அசாத்தியம் என்ற ஒன்றே கிடையாது. எதுவும் சாத்தியம். எதுவும் என்னால் முடியும். இப்படி எண்ணுபவனிற்கே இவ்வுலகம். இப்படி எண்ணுபவனுக்கே வாழ்க்கையில் வெற்றி. இப்படி எண்ணுபவனுக்கே இவ்வுலக இன்பங்கள்.இப்படி எண்ணுபவனே சமுதாயத்துக்கும் தனக்கும் பயனுள்ள வாழ்க்கையை நடத்த முடியும்.

எதுவும் சாத்தியம் என்று தமிழிலே பாடியவர் தாயுமானவர். "கரடி வெம்புலி வாயையும் கட்டலாம். ஒரு சிங்க முதுகின் மேற் கொள்ளலாம். கட்செவி எடுத்தாட்டலாம். அனல்மேல் நடக்கலாம். ஜலமேல் இருக்கலாம். தன்னிகரில் சித்தி பெறலாம். சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமிது காண்." என்று பாடினார். சிந்தையை அடக்குதலைக் கூட அரிய காரியம் என்றாரல்லாது அசாத்தியமென்று கூறவில்லை. சிந்தையை அடக்குதல் அரிய காரியம் தான். ஆனால் அதையும் மனிதர்கள் செய்யத்தான்

அ.ந.கந்தசாமி

இரண்டாவதாகக் கூறிய வாழ்க்கையை நாம் நமது முயற்சியினால் செப்பனிட்டுக் கொள்ள முடியும். சரியான படி முயன்றால் இவ்வுலகில் நம்மால் பெற முடியாததொன்றில்லை. முயற்சியாளர்கள், ஆள்வினை உடையவர்கள் நடக்க முடியாது என்று மற்றவர்களால் கருதப் பட்ட பலவற்றை நடக்கச் செய்திருக்கின்றார்கள். மனிதன் தன் முயற்சியால் செய்யக் கூடிய வினைகளிற்கு , அடையக் கூடிய வெற்றிகளிற்கு எல்லையே கிடையாது. காட்டில் திரிந்த மனிதன் இன்று காற்றில் பறக்கின்றான், ஜெட் விமானத்தில். ஜெட்டில் பறக்கும் மனிதன் இன்று வான வெளிக்கு அப்பால் வெளி வானில் ராக்கெட்டில் செல்கின்றான் அண்ட கோளங்களையடைய, சந்திரனில் செவ்வாயில் சுக்கிரனில் தன் வெற்றிக் கொடியினைப் பறக்க விட. இது எதனைக் காட்டுகின்றது? மனித முயற்சியின் சக்தியை, உழைப்பின் வெற்றியை உலகிற்கு அழுத்தம் திருத்தமாக எடுத்துரைக்க இச் சாதனைகள் உதவுகின்றன.

முயற்சியின் பெருமைகளை உணர்ந்தவர்களில் ஒருவன் நெப்போலியன் என்ற பிரெஞ்சு வீரன். யார் இவரென்றறியாத ஏழைக் குடும்பத்தில்

செய்கிறார்கள்! சிந்தையை அடக்கியவர்கள் இன்றுகூட எம்மிடையில் இல்லாமல் இல்லை!

முயற்சியின் பெருமையைப் பற்றி வள்ளுவர் "முயற்சி திருவினையாக்கும். முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்" என்று கூறியிருக்கிறார்.

முயற்சியால் வாழ்வை வளம் பெறச் செய்ய மட்டுமல்ல, சாவையும் வெல்ல முடியும்! இந்த உலகில் சாவை நீடிக்க விரும்பாதவர்கள் யாரும் கிடையாது. தற்கொலையை நாடும் ஒரு சில மன நோயாளர்களைத் தவிர. வைத்தியத்துறை விஞ்ஞானிகள் இத்துறையில் ஈடுபட்டு உழைத்து வருகின்றார்கள். அதன் பயனாக சாவை வெல்லும் துறையிலும் மனிதன் முன்னேற்றம் அடைந்து வருகின்றான்.

மலேரியா பரப்பும் கொசுவை ஒழிக்க மனிதன் மருந்து கண்டான். அம்மை நோயைத் தடுக்க அம்மைப் பால் கட்ட ஆரம்பித்தான். உடலை ரோகங்கள் அணுகாது தடுத்துப் பலமுறுத்த விட்டமின் ஜீவசத்துக்களை கண்டுபிடித்தான். இக்கண்டு பிடிப்புகளால் உலகம் முழுவதிலும் மக்களின் சராசரி சாவு விகிதம் குறைந்து வருகிறது.

ஆம் இன்றைய உலகில் வாழ்க்கை முன்னேறிக் கொண்டிருக்கிறது. சாவு பின்னேறிக் கொண்டிருக்கிறது. மனிதனின் தாக்குதலுக்கு முன்னால் யமனால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. சுமார் 15 வருடங்களுக்கு முன்னால் இலங்கையில் சராசரி 40 வயதில் மனிதனை எமபுரத்திற்கு இட்டுச்சென்ற எம கிங்கரர்கள் இன்று 63 வயது வரை காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. சீக்கிரம் மனிதன் சாவை முற்றாக வென்று விடவும் கூடும். சமீபத்தில் ஒரு சோவியத் விஞ்ஞானி "மனிதன் சாக வேண்டிய அவசியமில்லை. சாசுவதமாக சீவிக்க வழி காணப்படுவது சாத்தியமே" என்று கூறியிருக்கிறார்.

(தொடரும்)

கவிதை

சிந்தனையும் மின்னொளியும்

அறிஞர் அ.ந.கந்தசாமி

சாளரத்தின் ஊடாகப் பார்த்திருந்தேன் சகமெல்லாம்
ஆழ உறங்கியது அர்த்த ராத்திரி வேளையிலே
வானம் நடுக்கமுற வையமெலாம் கிடுகிடுக்க
மோனத்தை வெட்டி யிடியொன்றுமோதியதே.
"சட்" டென்று வானம் பொத்ததுபோல் பெருமாரி
கொட்டத்தொடங்கியது. "ஹோ"வென்ற இரைச்சலுடன்
ஊளையிடு நரியைப்போல் பெருங்காற்றும் உதறியது.
ஆளை விழுத்திவிடும் அத்தகைய பேய்க்காற்று.
சூறா வழியிதுவா உலகினையே மாய்க்க வந்த
ஆறாத பெரும் ஊழிக் காலத்தின் காற்றிதுவோ?
சாளரத்துக் கதவிரண்டும் துடிதுடித்து மோதியது.
ஆழிப்பெரும் புயல்போல் அல்லோலம் அவ்வேளை
உலகம் சீரழிவுற்ற(து). அப்போ வானத்தில்
மாயும் உலகினுக்கு ஒளிவிளக்கந் தாங்கிவந்த
காயும் மின்னலொன்று கணநேரம் தோற்றியதே.
கொட்டு மிடித்தாளம் இசைய நடம் செய்யும்
மட்டற்ற பேரழகு வான்வனிதை போல் மின்னல்
தோன்றி மறைந்ததுவே. சிந்தனையின் தரங்கங்கள்
ஊன்றி எழுந்தன இவ்வொளிமின்னல் செயல் என்னே!
வாழ்வோ கணரேம். கணநேரம் தானுமுண்டோ?
சாவும் பிறப்புமக் கணநேரத்தடங்குமன்றோ?
ஜனனப் படுக்கையலே ஏழைமின்னல் தன்னுடைய
மரணத்தைக் கண்டு துடிதுடித்து மடிகின்ற
சேதி புதினமன்று. அச்சேதியிலே நாணன் காணும்
சோதி கொளுத்திச் சோபித்தனைச் செய்து விட்டு
ஓடி மறைகிறது. வாழும் சிறு கணத்தில்
தேடி ஒரு சேவை செகத்தினிற்குச செய்ததுவே.
சேவையதன் மூச்(சு). அச்சேவை யிழந்தவுடன்
ஆவிபிரிந்து அகல்வானிற் கலந்ததுவே.
என்னே இம்மின்னல(து) எழிலே யென்றிருந்தேன்.
மண்ணின் மக்களுக்கு மின்னல் ஒரு சேதிசொல்லும்ஹ
வாழும்சிறு கணத்தில் வைய மெலாம் ஒளிதரவே
நாளும் முயற்சி செய்யும் நல்லசெயல் அதுவாகும்.
இந்த வாறாகச் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டேன்.
புந்தி நடுங்கப் புரண்டதோர் பேரிடி. நான்
இந்த உலகினிற்கு வந்தடைந்தேன். என்னுடைய
சிந்தனையால் இச் சகம்தான் சிறிதுபயன் கண்டிடுமோ?

நன்றி "ஈழகேசரி" – 1943

வர்த்தகம்

திரைகடலோடித் திரவியம் தேடிய நம்மவர் இன்று கனடாவிலும் கால் பதித்து பல் வேறு துறைகளிலும் வெற்றிக் கொடி நாட்டி வருகின்றார்கள். தொழிற் துறைகளிலும் பல குறிப்பிடும் படியான, பெருமைப் படத்தக்க சாதனைகள். தமிழ் வானொலி, போட்டலோ, OSSAI Electronics Products, மணமகற்றும் கருவி, இவ்விதமாக பல விதமான சாதனைகள். இரவியின் வர்த்தகப் பகுதியில் இத்தகைய சாதனைகள் பற்றிய தகவல்களையும், இத்தகைய சாதனையாளர்களுடனான பேட்டிகளையும் வெளியிட விரும்புகின்றோம். ஆர்வமுள்ளவர்கள் இரவியுடன் தொடர்பு கொள்ளவும். அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

(416) 924 – 6456

'எழும் பசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி'
— பாரதியார் —

இரவி மலர் 1 இதழ் 1
ஆனி 14, 1998
ஆசிரியர் வ.ந.கிரிதரன்

எமது தலையங்கம்..

இரவியின் உதயம்....

'பத்தோடு பதினொன்று, அத்தோடு இதுவுமொன்றாக' இரவியும் போய் விடுமோ? என்று வாசகர்கள் சந்தேகிக்கலாம். இயலுமானவரையில் இந்த இரவி தொடர்ந்து ஒளி வீசவே முயற்சி செய்வோம். காலப்போக்கில் மேலும் பல பக்கங்களுடன் , பயனுள்ள ஆக்கங்களுடன் இரவி வெளி வர ஆவன செய்வோம். ஆரம்ப இதழ்களில் கூடுதலாக இலக்கியம், அறிவியல்,சூழல், மற்றும் இம் மண்ணில் நம்மவர் சாதனைகள், நிகழ்வுகள் போன்றவற்றிற்கே இடம் ஒதுக்கப்படும். நம் மக்களை, நம்மண்ணைப் பாதிக்கின்ற பொதுவான அரசியற் பிரச்சினைகளிற்கு அவ்வப்போது முகம் கொடுத்தாலும் ஒரு பக்கச் சார்பான விடயங்கள் தவிர்க்கப் படும். மக்களின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு நடுநிலை பேணப்படும். கணணி, சூழல் பாதுகாப்பு, மற்றும் கவிதைகள், சிறுகதைகள் போன்றவற்றை எதிர்பார்க்கின்றோம். இம்முதலாவது இதழ் ஈழத்து இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவரான அறிஞர் அ.ந.கந்தசாமி ஞாபகர்த்த சிறப்பிதழாக வெளி வருகின்றது. இதழ் இலவசமாகவே விநியோகிக்கப் படுகின்றது. அதிகமானவர்களைச் சென்றடைய வேண்டுமென்பதே எங்கள் அவா.

இந்தியா வெடித்த குண்டு....

பாரதிய ஜனதா கட்சிக்கு அண்மைய அனுவாயுத சோதனைகள் எதிர்வரும் தேர்தல்களில் அதிக ஆசனங்களைப் பெற்றுத் தரலாம். 'இந்திய நலன்களைப் பேணும் உறுதியான தலைமை' என்னும் எண்ணத்தை மக்களிடத்தில் இச்சோதனைகள் ஏற்படுத்தும். அனுவாயுத ஒழிப்பிற்கு அச்சுறுத்தலாக இச் சோதனைகள் அமைந்துள்ளன. அதே சமயம் அனுவாயுதங்களைத் தம் கைவசம் அதிகளவில் வைத்துக் கொண்டே ஒருபக்கச் சார்பாக இந்தியாவைக் கண்டிப்பதில் எதுவித அர்த்தமுமில்லை 'ஒரு சில நாடுகள் இந்த விடயத்தில் பாகுபாடாக , ஓரபட்சமாக இந்தியாவை நிர்ப்பந்திக்கின்றன' என்ற இந்தியாவின் கூற்றிலுள்ள நியாயத்தை மறுப்பதற்கில்லை.

நாட்டு நடப்பு

சிங்கப்பூரு மச்சான் சிரிக்கச் சிரிக்க வைச்சான்....

தமிழ் அதிகம் தெரியாத சிங்கப்பூர் மோகனிற்கு நிகழ்ச்சிகளைச் சுவையாகச் சொல்லத் தெரிந்திருக்கின்றது. கீதவாணி மோகனைத் தான் சொல்லுகின்றேன். இவரது 'கணணியும் நீங்களும்' நல்லதொரு நிகழ்ச்சி. கூடவே நிகழ்ச்சியைச் சுவாரஸ்யமாக்க ராஜா சொக்கலிங்கம்.. தமிழ் தெரியாத மோகனிற்கு நிகழ்ச்சிகளைச் சுவையாக்க முடிந்திருக்கின்றது. வேறு சில அசல் தமிழர்களிற்கோ தமிழையே ஒழுங்காகப் பேச முடியவில்லையே. பன்மை எழுவாயிற்கு பன்மை பயனிலை தான் வரவேண்டுமென்ற நியதி கூட இவர்களிற்குத் தெரியவில்லையே? கவனித்தால் என்ன? ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். மோகனிற்குச் சுவை படச் சொல்லத் தெரிந்திருக்கின்றதென்றால் இவரது குரு 'உங்கள் வீட்டுப் பிள்ளை' ராஜ்குமாரிற்கோ யார் யாரை எப்படிப் பாவிக்க வேண்டுமென்பது புரிந்திருக்கின்றது........

(மோகன் 'கணணியும் நீங்களும்' நிகழ்ச்சியிலிருந்து நீக்கப் பட்டுள்ளதாக அறிகின்றோம். இந் நிகழ்ச்சி இனியும் சுவைக்குமா? போகப் போகத் தான் தெரியும்).

'மறுமொழி' எங்கே...

மறுமொழிக்கு என்ன நடந்தது?.. நம்பிக்கை தருகின்றதேயென்று பார்த்தால்... சிவதாசன் wake up. மறுமொழியின் மறுமொழியைத் தான் காணவில்லையென்று பார்த்தால் 'முகரம்' போனவிடமே தெரியவில்லை. நம்பிக்கை தந்த தேடலையோ தேடவேண்டியிருக்கின்றது. இந்த விடயத்தில் 'தாயகத்தை'ப் பாராட்டத் தான் வேண்டும். தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் வந்திருக்கின்றதே..!

கோவிந்தனின் 'புதியதோர் உலகம்' நாவல் பற்றிய கருத்தரங்கு....

தமிழ் ஈழத்திற்கான சர்வதேச ஒன்றியம் (IFTE) அண்மைக் காலமாகப் பல காத்திரமான கருத்தரங்குகளை நடத்தி வந்துள்ளது. தேசியம், பெண் விடுதலை, முஸ்லீம் மக்கள் பிரச்சினைகள் போன்ற பல விடயங்களில் ஆரோக்கியமான கருத்தரங்குகள். அந்த வகையில் அண்மையில் கோவிந்தனின் 'புதியதோர் உலகம்' நாவல் பற்றிய கருத்தரங்கு நடை பெற்றது. பிரபல எழுத்தாளர்களான ராவுத்தர், மகரந்தன், ஞானம் லம்பேட், வ.ந.கிரிதரன், ஓவியர் ஜீவா உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர். பாரதி மோகன் தலைமை தாங்கினார். இதற்காக பாரதி மோகனைப் பாராட்டத்தான் வேண்டும். இத்தகைய நிகழ்வுகளிற்குத் தமிழ் மக்களும், பத்திரிகைகளும் போதிய ஆதரவினை அளிக்க முன் வர வேண்டும்.

வ.ந.கிரிதரனின் 'அமெரிக்கா' ஆய்வரங்கு..

அண்மையில் தமிழர் வகைதுறைவள நிலையத்தினரால் வ.ந.கிரிதரனின் 'அமெரிக்கா' நூல் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. கலாநிதி ராஜ்மோகன் தலைமையில், திறமையான நெறிப்படுத்தலில் நிகழ்ந்த ஆய்வரங்கில் முன்னால் யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் ராஜேந்திரன், பிரபல விமர்சகர் ஞானம் லம்பேட், எழுத்தாளர் அ.கந்தசாமி ஆகியோர்
ஆய்வுக் கட்டுரைகளை வாசித்தனர்.
நாடக்துறையில் புகழ் பெற்ற பி.விக்கினேஸ்வரன், 'மறுமொழி' சிவதாசன், ஜோர்ஜ் குருஷேவ்,ரதன், டிபி.எஸ் உட்படப் பல இலக்கியப் பிரமுகர்கள், ஆர்வலர்கள் கலந்து சிறப்பித்தனர். பார்வையாளர்களின் கேள்விகளும், நூலாசிரியரின் பதில்களுமாக நிகழ்ச்சி களை கட்டியிருந்தது. அருமையாக நெறிப்படுத்திய கலாநிதி ராஜ்மோகனைப் பாராட்டத் தான் வேண்டும்.

வாசகர்களிற்கு ஒரு வேண்டுகோள்... டொராண்டோவில் நடக்கும் எல்லா நிகழ்ச்சிகளையும் சென்று பார்க்கும் சாத்தியம் அரிது. அதனால் இப்பகுதியில் இங்கு நடைபெறும் நிகழ்வுகளைப் பற்றிய குறிப்புகளை வெளியிட விரும்புவர்கள் எமக்கு அனுப்பி வைக்கலாம். வெளியிடுவோம்.

கவிதை


விழித்தெழுதல்

— ரீட்டா டோன் — தமிழில்: எம். எஸ்தர் நன்றி காலச்சுவடு —

ஒரு அழைப்பிதழ் போன்று
எங்கும் பரவியுள்ளது வெறுமை
நீ இல்லாத இக் கணங்களில்
நண்பர்களும் உறவினர்களும் வந்து
வீட்டை நிரப்ப முயல்கின்றனர்
அறைகளோ இன்னும் காலியாகவே உள்ளன.
நான் நாற்காலியில் அமர்ந்திருக்கும் போது
கதகதப்பான உன் மூச்சுக் காற்று
என் தோளின் மீது படிகிறது.
படுக்கைக்கு ஏறிச் செல்லும்போது
கண்ணுக்குப் புலப்படா உன்
பிரிவினூடே நடக்கிறேன
கீழ்த் தளத்தில்
தங்கியுள்ள மற்றவர்களோ
அழுகையால் இந்த மௌனத்தை
மறைக்க முயல்கின்றனர்.
நான் படுக்கையில் விழும்போது
என்னுடைய கருப்பையின்
குளிர்ந்த திரவங்களில் வீழுகின்றேன்.
ஆங்கு குழந்தையாகி
யாருக்கும் தொங்கிழைக்காத
ஒரு உயிராக
நிராதரவாக வளர்ந்து வருகிறேன்.
நான் உறங்கினேன்
என்னால் முடிந்ததெல்லாம் அது மட்டுமே
கனவுகளும் கண்டேன்
என்னால் அதை நிறுத்த முடியவில்லை.

நூல்விமர்சனம்:

அமெரிக்கா



சமூக நிகழ்வுகளை ஒரு தளத்தில் வைத்து அந்த நிகழ்வுகளுக்கு ஒரு உருவம் கொடுப்பதிலும் அவற்றை பல்லின ஆக்கங்கள் செய்வதிலும் எமக்குப் பெரும் பங்குண்டு. அந்த நிகழ்வுகளிற்குக் கொடுத்த உருவம் தான் இந்த அமெரிக்கா என்ற இந்தச் சிறு நூலாகும். இதிலுள்ள ஏழு சிறு கதைகளையும் , குறு நாவலையும் படிக்கின்ற பொழுது ***George plackanav*** இன் " *மனிதன் தன்னைச் சற்றியுள்ள யதார்த்தத்தின் செல்வாக்கில் அனுபவித்துள்ள உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் தனக்குள் மீண்டும் எழச் செய்து அவற்றைத் திட்டவட்டமாக உருவங்களில்*

"...அண்மையில் டொராண்டோவில் நிகழ்ந்த "அமெரிக்கா" பற்றிய விமர்சன ஆய்வரங்கில் பிரபல விமர்சகர் ஞானம் அல்பேட்டினால் வாசிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையிலிருந்து சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன. ஞானம் லம்பேட் அவர்கள் கனேடிய தமிழ் நாடக உலகிற்குப் புத்துயிர் ஊட்டியவர்களில் முதன்மையானவர். ஆதற்காகப் பாராட்டப் பட வேண்டியவர்... "

வெளியிடும் பொழுது கலை பிறக்கின்றது' என்ற கூற்று தான் ஞாபகத்திற்கு வருகின்றது. இங்குள்ள ஏழு சிறுகதைகளிலும் தனி மனிதனிற்கும் சமூகத்திற்கும் இடையிலான உறவு, அந்த உறவு காரணமாக ஏற்பட்ட பிணக்குகள், அப் பிணக்குகள் காரணமாக ஏற்பட்ட சில அபிப்பிராயங்கள் அல்லது



திரு ஞானம் லம்பேட் ஆய்வுரை வழங்கும் காட்சி. அருகில் எழுத்தாளர் சிவம்.

கருத்துக்கள் பற்றிய நண்பர் கிரிதரன் அவர்களின் கோட்பாடே மேலோங்கி நிற்கின்றது.

கதைகளின் தொடக்கமும் முடிவும்...
கதைக் கருவை வளர்த்து அதை வெளிப்படக் கதையின் தொடக்கத்திலும் முடிவிலும் அவர் காட்டும் நுணுக்கம்.. இங்கு தான் ஆசிரியருடைய கதை வளர்க்கும் நுட்பத் திறனைக் காண்கின்றேன்.

சமகால நிகழ்வுகள்...
இவருடைய எல்லாக் கதைகளிலும் சமகால நிகழ்வுகள் காட்டப் படுகின்றன. ஆனால் சம கால நிகழ்வைக் காட்டிய போதிலும் சமகால இருப்பைகச் சித்தரிக்காமல் தன்னுடைய இலக்கியக் கோர்வைக்க சமகால உணர்வைப் பயன்படுத்துகின்றார்.

பிரபல விமர்சகர் ஞானம் அல்பேட்

உரைநடை (Narration)....
கதைகள் யாவுமே Narrative பாணியில் கதை சொல்லும் பாணியில் அமைந்துள்ளது. கதாசிரியரே நேரடியாகக் கதை சொல்வதால் கதையின் வளைவு அல்லது கருத்து வெளிப்படையாகவே தெரிகின்றது. இதன் காரணமாக தனது கருத்தக்களை நிறைய சொல்ல வேண்டும் உன்ற அவா சிறுகதைகளின் செறிவுத் தன்மையைக் குறைத்து உரு நெகிழ்வுத் தன்மையைக் காட்டுகின்றது. சமகாலப் பிரச்சனைகளை ஆராய்வதை விட இந்தப் பிரச்சனைகள் காரணமாக ஏற்பட்ட உணர்ச்சிச் சுழிப்புகளை எடுத்துக் காட்டுகின்றார் என்பது தான் பொருத்தமாயிருக்கும்.

வருணனை...
இவருடைய எல்லாக் கதைகளிலுமே மிகை வருணனை கிடையாது. எல்லாப் பாத்திர, நிகழ்வு வருணனைகளும் கதைத் தேவையோடு மட்டும் மிக அழகாக உள்ளன.

இயல்பு நெறி....
கதாசிரியரின் இயல்பு நெறிக் கண்ணோட்டம் காரணமாக பாததிரப் படைப்புக்கள் கூட மிகச் சிக்கனமாக இரண்டு அல்லது மூன்று என்றதோடு கட்டுப் படுத்தி உரையாடலையும் சிக்கனமாகப் பயன்படுத்தியுள்ளார்

சினிமா

காதல் + கப்பல்+ கறுப்பு

காதல் ஓர் அற்புதமான உணர்வு. மெய்சிலிர்க்கும் அனுபவம். வாழ்நாளில் ஒவ்வொருவரும் அனுபவித்த, அனுபவிக்கின்ற சுகானுபவம். இதனைக் காசாக்கும் முயற்சியில் பலர்



முயன்று வருகின்றார்கள். அண்மைக்காலங்களில் தமிழ்த் திரையுலகில் பலபடங்கள் தொடர்ச்சியாக இதன் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டன. "காதலுக்கு நிம்மதி", "காதலா காதலா", "காதல் மரியாதை", காதல் மன்னன்", "காதல் பள்ளி" என பல படங்கள்.

இவை யாவும் காதல் யதார்த்தத்தை வெளிக்காட்டினவா? நீங்கள் காதலியுடன் கதைக்கவே தேவையில்லை. பார்த்துக்கொண்டே காதலிக்கலாம். அல்லது காதலனோ காதலியோ ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளாமல் தொலைபேசியில் காதலிக்கலாம். காதலுக்கு கண்ணில்லை

> "ரதன் கனடா இலக்கிய வட்டாரத்தில் நன்கு அறியப்பட்ட ஒருவர். 'மகரந்தன்' எனும் புனைபெயரிலும் எழுதுபவர். இவரது இயற்பெயர் ரகுநாதன். அதிகமான திரைப்பட விமர்சனங்களை எழுதியவர்"

என்பது ஒரு முதுமொழி. இப்படியாக பல புதுவகையான காதல் அனுபவங்களை இப்படங்கள் வெளிக்காட்டுகின்றன. உண்மையிலேயே இப்படியெல்லாம் காதலிக்கலாமா எனக் கேட்டால், நீங்கள் என்னை அடிக்க வருவீர்கள்.

இவற்றையெல்லாம் மீறி காதலுக்கு மரியாதை ஒன்றை அளித்துள்ளார் . பெற்றோர் அனுமதியுடனேயே திருமணம் செய்து கொள்வது நல்லது என்பது அவரது கருத்து. சில பிற்போக்குத் தனமான கருத்துக்கள் கூட நல்ல காட்சியமைப்புகள், உணர்ச்சிகரமான வசனங்கள், சிறந்த நடிப்பு என்பவற்றின் மூலம் காவியமாக்கப்படுகின்றன என்பதற்கு காதலுக்கு மரியாதை நல்லதொரு உதாரணம்.

பெண்ணிலைவாதி நண்பர் ஒருவரை இப்படங்கள் பற்றிக் கேட்டபோது அவர் "இவை யாவும் பெண்ணுக்கு எதிரான படங்கள், கற்பு நிலை சார்ந்த படங்கள்" என்றார். அவரது கூற்றில் உள்ள நியாயத்தை நிராகரிக்க முடியாது.

காதல் என்பது ஒரு மாயை. இது ஓர் கவர்ச்சி. இது பொருளாதார நிலையிலும் தங்கியுள்ளது என்பது இவரது வாதம். (இதுபற்றி உங்கள் கருத்துக்களை அறிய ஆவலாக உள்ளோம்.)

"fire" திரைப்படத்தில் பெண்ணும் பெண்ணும் காதலிப்பதை நிலை நிறுத்தும் இயக்குனர் வேலைக்காரனின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்துவது ஏனோ? மோகமுள் திரைப்படத்தில் வயது வந்த முதியவரை மணந்த பெண் பாபுவை காதலிப்பதை ஜானகிராமனும், திரைக்கதை ஆசிரியரும் ஏற்றுக்கொள்ளவில்லை. பாபு ஜமுனாவின் மேல் கொண்டிருப்பது வெறும் காமம்தான். காதல் அல்ல என்கிறார் ஜானகிராமன்.

ரதன்

மு.பாலச்சந்தரின் காதல் அவ்வப்போது உருமாறும். எனினும் இவரது காதல் யாவும் கற்புநிலை சார்ந்ததே. தொலைக்காட்சித் தொடர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. மிகவும் பலராலும் பார்க்கப்படும் தொடரான "சக்தியில்" சிறிராமை பவித்திரா காதலிக்கிறாள். இவளது சகோதரி ப்ரீதா (பானுப்பிரியா) சிறிராமனின் சகோதரனை மணமுடித்துள்ளார். எனவே ஒரே வீட்டில் இரு சகோதரிகள் மணமுடிக்கக் கூடாது என்பது கோடீஸ்வரனின் (ஜெய்கணேஸ்) விருப்பம். இதனைப் பீரதாவும் ஏற்றுக் கொள்கிறாள். எனவே தந்தையின் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறாள்.

இப்படியெல்லாம் காதலில் பல சிக்கல்கள் கூட உண்டு. இவற்றையெல்லாம் மீறி பட்டுக்கோட்டை பிரபாகரின் கதை ஒன்று. 'கனவுகள் இலவசம்' தொலைக்காட்சியில் தொடராகியுள்ளது. துப்பறியும் நாவலாசிரியர் யதார்த்தமாக கூறியுள்ளார். அனைவரும் கட்டாயம் பார்க்க வேண்டிய தொடர் இது.

1912 ம் ஆண்டில் இங்கிலாந்திலிருந்து கிளம்பிய "டைட்டானிக்" (வெள்ளோட்டம்) தனது முதலாவது பயணத்திலே பனிப்பாறையில் மோதி கடலுக்குள் மூழ்கிவிடுகிறது. இந்த வரலாற்றை ஓர் மெல்லிய காதல் கதையுடனும் பிரமாண்டமான காட்சியமைப்புகளுடனும் இயக்கியுள்ளார் கனடியரான James Camaroon. நாயகி கேட் வின்ஸ் வெட் முன்பும் ஓர் காதல் படம் ஒன்றில் சிறப்பாக நடித்துள்ளார். (sense and sensibility) நாயகனும் முன்பு ஒஸ்காரின் சிறந்த இணை நடிகருக்கான விருதைத் தட்டிச் சென்றவர். இவை யாவும் சேர்ந்து படத்தை வெற்றியின் உச்சிக்கு கொண்டு சென்று விட்டன. இதனையொட்டி பல படங்களை வெகு விரைவில் தமிழ்த்திரையுலகில் எதிர்பார்க்கலாம். எனவே ஒரே காட்சிகளை பல படங்களில் எதிர் பார்க்கலாம். உதாரணத்துக்கு கமலின் "காதலா காதலா", "நாமிருவர் நமக்கிருவர்" என்பனவற்றைக் கூறலாம். டைட்டானிக சம்பவம் பற்றிய பல வரலாற்று உண்மைகள் இப்படத்தின் மூலம் வெளிக் கொணரப்படவில்லை என்பது உண்மையே. சம்பவத்தில் மூழ்கி இறந்தவர்கள் பலர் மூன்றாவது வகுப்பில் பயணம் செய்தோரே. காப்பற்றப்பட்டவர்கள முதல் வகுப்பில் பயணம் செய்தோராவர். கப்பலழினுள்ளே மூழ்கி இறந்தவர்கள் பலர் கப்பலினுள் வேலை செய்தவர்கள். இதே கால கட்டத்தில் வெளிவந்த மற்றுமொரு படம் "AMISTAD". டைட்டானிக் பார்க்கத் தவறுவது சிறந்த அனுபவம் ஒன்றை பெறத் தவறியவர்கள் எனக் கூறும் பலர் "AMISTAD"ஐப் பார்க்கத் தவறியது ஒன்றும் ஆச்சர்யத்தைத் தரவில்லை.இதிலும் பிரமாண்டம் உண்டு. மனிதாபிமானம் உண்டு. Shindliers List என்ற அற்புதமான படத்தைத் தந்த அதே இயக்குனரின் படமே AMISTAD. கறுப்பின மக்கள் எவ்வாறு அடிமைப்படுத்தப்பட்டு கொடுமைப் படுத்தப் பட்டார்கள் என்பதை விபரிக்கும் படம். ஒவ்வொரு கறுப்பின மக்களுக்கும் தம் மூதாதையர்கள் வந்த கடுமையான பாதையை நினைவூட்டும் படம். TITANIC ற்குக் கிடைத்த விளம்பரம் இப்படத்திற்குக் கிடைக்கவில்லை. ஒஸ்காரிலும் இப்படம் வழமை போல் ஒதுக்கப்பட்டு [illegible].

காந்தி படத்திற்கு ஒஸ்கார் அளித்த மரியாதை இதற்குக் கொடுக்கப் படவில்லை. ஏனெனில் இது இங்கிலாந்தைப் பற்றியது. இது அமெரிக்காவைப் பற்றியது. இப் படத்தில் மையமாகக் கூறப்பட்டுள்ள Colombus மாநிலத்திலுள்ள அரும் பொருட் காட்சியகத்திற்குச் செல்லும் சந்தர்ப்பம் கிட்டியது. ஆங்கு சென்றபொழுது ஒரே ஆச்சர்யம். கறுப்பின மக்கள் வாழ்ந்ததாகக் காட்டப்பட்டுள்ள வீட்டிற்கும் வெள்ளையின மக்கள் வாழ்ந்ததாகக் காட்டப் பட்டுள்ள வீட்டிற்குமிடையில் வித்தியாசங்கலில்லை. ஏவ்வாறு வரலாறுகள் திரிபு படுத்தப்படுகின்றன எனடபதற்கு இது ஓர் நல்ல உதாரணம். AMISTAD படம் கட்டாயம் அனைவராலும் பார்க்க வேண்டிய படம். சகல வீடியோ கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பாப்பா மலர்

— தயாரிப்பு மாலா அக்கா —



தம்பி தங்கைகளே! அனைவரிற்கும் மாலா அக்காவின் அன்பு முத்தங்கள். இவ்விதழ் பாப்பா மலரில் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பாவின் அருமையான கவிதையொன்றைப் படித்துச் சுவையுங்கள். அடுத்த இதழில் அக்கா மேலும் பல சுவையான விடயங்களுடன் உங்களைச் சந்திக்க இருக்கின்றா. உங்கள் ஆக்கங்களையும் அக்காவிற்கு அனுப்பி வையுங்கள். பிரசுரிப்போம்.

— மாலா அக்கா —

ஏணி மேலே ஏணி

— குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா —

ஏணி மேலே ஏணி வைத்து
ஏறப் போகின்றேன்.
ஏறி ஏறி எட்டி வானை
முட்டப் போகின்றேன்
வானில் உள்ள மீனையெல்லாம்
வளைக்கப் போகின்றேன்.
வளைத்து வளைத்துச் சட்டைப் பைக்குள்
அடைக்கப் போகின்றேன்.
பந்து நிலா அதை எடுத்து
வீசப் போகின்றேன்.
பாலு, சோமு உங்கள் சமர்த்தைப்
பார்க்கப் போகின்றேன்.
முந்திப் பந்தைப் பிடிப்பவனை
வாழ்த்தப் போகின்றேன்.
மூச்சுப் பிடித்துப் பூமிமீது
குதிக்கப்போகின்றேன்.

சமூகமே உன்னைக் கேட்கின்றோம்.

பொதுக் குற்றம் என்று ஒன்று உண்டா? அல்லது செய்தவர் மட்டுமே குற்றசாளியா?

இதற்கு விடை தேட நாடுங்கள்

Yorkwood Library

அரங்கை.

July 26ம் நாள்

ஞானம் லம்பேட்டின் நெறியாள்கையில்

"விடை தேடும் வடிவங்கள்'

Yorkwood Library அரங்கு

1785 **Finch Avenue WEST**

காலம் மாலை 6 மணி

பெண்கள் பகுதி:

அன்பான சகோதரிகளே இப் பகுதிக்கு உங்களது ஆக்கங்களை, குறிப்புக்களை அனுப்பி வைக்கவும். பிரசுரிப்போம். கதை , கட்டுரை, கவிதகளையும் அனுப்பி வைக்கவும்.

மருத்துவக் குறிப்புக்கள்



எல்லாக் குழந்தைகளிற்கும் மூன்று மாதங்களிற்குப் பிறகு வெறும் தாயப்பால் மட்டும் கொடுத்தால் போதாது. இந்தக் கட்டத்தில் கூடுதல் புரதம், வைட்டமின் சத்துக்கள் தேவை. பழங்கள், காய்கறிகள், தானியங்கள், இவற்றின் கூழ்களைக் கொஞ்சம் கொஞ்சமாக மூன்றாம் மாதத்திலிருந்து கொடுக்கத் தொடங்கலாம்.

குழந்தை அவசர அவசரமாகப் பாலைக் குடிக்கும் போது நிறைய காற்றையும் உட்கொள்கின்றது. காற்று வெளியேறும் போது சிறிதளவு பாலும் கக்கலாக வெளியேறும். பால் கொடுத்த பிறகு, குழந்தையைத் தோளில் சாத்திக் கொண்டு முதுகில் தட்டி, ஏப்பம் விடச் செய்வதன் மூலம் காற்றை வெளியேற்றி, கக்கலைத் தவிர்க்கலாம். அல்லாவிடில் குழந்தைக்கு வயிற்றில் சங்கடம் ஏற்படும்.

Fungus என்பது காளான் வகையைச் சார்ந்த சருமப் பாதிப்பு. உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாவிடில், விரல் இடுக்குகள், அக்குள், இடுப்புப்பகுதி, தொடை இடுக்குகள் போன்ற இடங்களில் இது தோன்றக் கூடும். வியர்வை போக இருமுறை குளித்து, சருமத்தை ஈரமின்றித் துடைத்து, துவைத்து, வெயிலில் உலர்ந்த ஆடைகளை அணிந்து வருவது அவசியம். மீறி நோய் வந்து விட்டால் வைத்திய நிபுணரை அணுகி , ஆலோசனை பெறவும்.

செல்லக் குட்டிக்கு..

— அழகிய பெரியவன் —

நீ வளரும் போது
உன் கழுத்தை
வளைத்துப் பழக்குவார்கள்.
சலங்கை, சிலம்பு,
வளையல், தாலி, மெட்டி
இப்படி
விலங்குகளையெல்லாம்
ஆபரணமாய்த் தருவார்கள்
உனக்கென சிந்திப்பார்கள் அவர்கள்.
அவர்களுக்கென
நீ வாழ்வாய்.

நன்றி "புதிய குரல்"

இரவி

மாதமொருமுறை
"எழும் பசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி"
— பாரதியார் —

பிரதம ஆசிரியர் வ.ந.கிரிதரன்

ஆலோசனைக் குழு
கடல் புத்திரன்
எஸ். தாசன்
அகஸ்டின்

வடிவமைப்பு
வ.ந.கிரிதரன்

அச்சுப் பதிவு
செல்வி

வெளியீடு
Webcom Communications
476 Parliament Street, Suite#201
Toronto M4X 1P2

ஓவியம் ஜீவா

விளம்பரம்
அந்தனி
மணிவாணன்

விநியோகம்
பாலமுரளி
தரன்

தொடர்புகளிற்கு
Webcom Communications
476 Parliament Street, Suite# 201
Toronto M4X 1P2
Tel: 416-924-6456
e-mail:gthami@pathcom.com

நல்லூர் ராஜதானி, அமெரிக்கா நூல் வெளியீட்டுக் காட்சிகள்

ஸ்நேகா பதிப்பகத்தின் வெளியீடுகள்

சென்னை தென்னிந்திய திரைப்பட வர்த்தக சங்கத் திரையரங்கத்தில் ஸ்நேகா பதிப்பத்தாரால் வெ.த.கிரிதரனின் "நல்லூர் ராஜதானி" ஆய்வு நூலும், "அமெரிக்கா" சிறுகதைத் தொகுதியும் வெளியிடப் பட்டன. விழாவிற்குத் தமிழ் நாட்டுத் திரைப்பட இயக்கத் தலைவர் தி.க.சதாசிவம் தலைமை தாங்கினார். ஈழத்துப் பிரபல எழுத்தாளர் திரு.செ.யோகநாதன் "அமெரிக்கா" நூலை வெளியிட தமிழகச் சினிமாத் துறையில் பிரபல ஒளிப்பதிவாளராக விளங்குபவரும், எழுத்தாளருமான திரு.தங்கர்பச்சான் பெற்றுக் கொண்டார். தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குனரான திரு. நடன காசிநாதன் "நல்லூர் ராஜதானி நகர அமைப்பு" நூலை வெளியிட ஈழத்துப் பிரபல எழுத்தாளரான திரு. செ.கணேசலிங்கன் பெற்றுக் கொண்டார். மிகச்சிறப்பாக நடைபெற்ற இவ் விழாவில் எஸ். வைத்தீஸ்வரனின் "விரல் மீட்டிய மழை" கவிதை நூலும், இரா முருகனின் "கம்ப்யூட்டர் கொஞ்சம் கலகலப்பு கொஞ்சம்" நூலும் வெளியிடப் பட்டன. தவிர்க்க முடியாத காரணங்களினால் எழுத்தாளர் கிரிதரனால் கலந்து கொள்ள முடியவில்லை. விழாவில் கல்கி ஆசிரியர் திருமதி சீதா ரவி, எழுத்தாளர் இரா முருகன், கவிதாயினி கனிமொழி கருணாநிதி உட்படப் பலர் கலந்து கொண்டனர். இதனை நன்கு நடாத்திய ஸ்நேகா நிறுவன உரிமையாளர் திரு பாலாஜி, ஸ்ரீனிவாசன், கலந்து கொண்ட எழுத்தாளர்கள் மற்றும் நூல்களை நூலகங்களிற்காக வாங்கிய தமிழக அரசிற்கும் நூலாசிரியர் கிரிதரன் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றார். விழாக் காட்சிகள் சிலவற்றையே இப்பக்கத்தில் காண்கின்றீர்கள்.




ஒளிப்பதிவாளர் திரு தங்கபச்சானிடமிருந்து திரு செ.யோகநாதன் "அமெரிக்கா" நூலைப் பெறும் காட்சி

நூல் வெளியீட்டு விழாக்காட்சிகள்



இடமிருந்து வலமாக திருமதி சீதா ரவி, திரு பத்மநாபன், திரு இரா முருகன், கவிஞர் வைத்தீஸ்வரன், திரு தி.க.சதாசிவம், திரு நடன காசிநாதன், திரு செ.யோகநாதன், திரு செ.கணேசலிங்கன் அமர்ந்திருக்கும் காட்சி



நல்லூர் ராஜதானி நூலை திரு நடன காசிநாதனிடமிருந்து திரு செ.கணேசலிங்கன் பெறும் காட்சி

தொடர் நாவல்

அத்தியாயம் ஒன்று:

மோகநிலா

வ.ந.கிரிதரன்



குழம்பிய நெஞ்சம்

இன்னும் இரண்டு மணித்தியாலங்கள்— அதுவரை சுகுணாவிற்கு இருப்புக் கொள்ளவில்லை. மனம் கிடந்து அலைபாய்ந்து கொண்டிருந்தது. நினைவு முழுக்க மகள் பானுவைப் பற்றியே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. நேற்றுத்தான் போலிருக்கிறது. அதற்குள் என்ன மாதிரி வளர்ந்து விட்டாள். அழகென்றால் அப்படியொரு அழகு பூரித்துப் பொங்கும் நதியழகு. சுகுணாவிற்கு மகளை நினைக்க நினைக்கப் பெருமிதமாக இருந்தது. கூடவே இனம் புரியாத கலக்கம் வேறு. தன்னந் தனியாக குடும்பத்தைக் கட்டியிழுப்பதென்பதன் சிரமத்தை அனுபவித்துப் பார்த்தால் தான் தெரியும்.

"என்ன சுகுணா ஒருமாதிரியிருக்கிறாய். என்ன நடந்தது" லிசாவின் குரல் சிந்தனையைக் கலைத்தது. லிசா ஒரு இத்தாலியப் பெண். அவளுடன் பணியாற்றுபவள். சிறியதொரு இலாப நோக்கற்று இயங்கும் ஸ்தாபனம். வளர்முக நாடுகளிலுள்ள விவசாயிகளிற்காக பல்வேறு ஆய்வுகளை நடத்தும் ஸ்தாபனம். தமிழ் நாட்டிலும் அத்ஸ்தாபனத்திற்கு ஒரு கிளையிருந்தது. தமிழ் நாட்டு விவசாயிகளிற்கான விடயங்களை மொழிபெயர்ப்பது. தமிழ் செய்தித்தாள் தயாரிப்பது இவைதான் சுகுணாவின் முக்கியமான வேலைகள்.

"ஒன்றுமில்லை லிசா எல்லாம் என் மகளைப் பற்றித்தான். என்ன மாதிரி வளர்ந்து விட்டாள்"

"அதற்கேன் சுகுணா கவலைப்படுகிறாய். சந்தோசப்படு" லிசா சிரித்தாள். தொடர்ந்து "மிகவும் அழகான பெண். பையன்கள் பின்னால் திரிவார்கள்" என்றும் கூறினாள். அதுதானே பிரச்சனைக்கே காரணம். சொன்னால் இவள் சிரிப்பாள். இவர்களிற்குப் பையன்கள் சுற்றித் திரியாவிட்டால் தான் கவலை. அந்தந்த வயதில் அந்தந்த மாதிரித்தானிருக்க வேண்டும். அதில் எதுவிதத் தவறுமில்லை. அளவு மீறி ஏதாவது நடந்து விட்டால் – எந்தவித ஆண்துணையும் இல்லாத நிலையில்— சுகுணாவிற்கு ராகவன் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. எந்தவிதப் பொறுப்புமில்லாமல் எப்படி அவனால் இருக்க முடிகிறது. வேலையென்று அமெரிக்கா போனவன் அப்படியே அங்கேயே ஒரு கயானாக் காரியுடன் தங்கிவிட்டான்.

அவனை நினைக்க நினைக்க எரிச்சலும், ஏமாற்றமும், சீற்றமும் பொங்கி வந்தன. சிரமப் பட்டு அடக்கிக் கொள்ள வேண்டியிருந்தது. இத்தனைக்கும் இவர்களது திருமணம் காதல் திருமணம். இவளை விடாமல் கலை கலையென்று கலைத்து, 'குரங்கு', 'சனியனென்று இவளிடம் அர்ச்சனை ஏராளம் வாங்கி, கடைசியில் இவளை விழுத்தியவன் அவன். எப்படி அவளால் இவ்வளவு இலகுவாகப் பிரிய மனது வந்தது? அப்படி அந்தக் கயானாக்காரியிடம் இவளிடமில்லாத எதைக் கண்டு விட்டான்? அவன் மட்டும் கூட இருந்திருந்தால் இந்தச் சமயத்தில் எவ்வளவு துணையாகயிருந்திருக்கும்? இவ்வளவு நடந்தும் இன்னும் அவன் மேல் பூரண வெறுப்பு வராததை நினைக்க இவளிற்குச் சிறிது ஆச்சர்யமாகக் கூடவிருந்தது. இவள் தொடர்ந்தும் மௌனமாகவிருப்பதைக் கண்ட லிசா சுகுணாவின் தோள்களை ஆதரவாகத் தட்டினாள்".

"ஹேய் சுகுணா. சின்னப்பிள்ளை மாதிரி யோசிக்காதே. உன் மகள் இங்கு பிறந்தவள். உன் நாட்டில் நீ வாழ்ந்த மாதிரி இங்கு அவள் வாழவேண்டுமென்று நீ நினைப்பது சரியல்ல. பயப்படாதே. அவளிற்குத் தெரியும் தன்னை எப்படிப் பாதுகாப்பதென்று. எதற்கும்..." சுகுணா லிசா மேலே என்ன சொல்லப் போகின்றாளோவென்று ஏறிட்டுப் பார்த்தாள். "எதற்கும் உன் மகளுடன் மனம் விட்டுக் கதைத்துப் பார். இங்கு நாங்கள் அப்படித தான் நடக்கன்றோம்."

சுகுணாவிற்கு லிசா கூறுவதும் சரியாகப்



பட்டது. எதற்காக வீணாக மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டும்? பானு எங்களுடைய உயிரணுவிலிருந்து தானே வந்தவள். எங்களுடைய பண்பாட்டிற்குரிய எச்ச சொச்சங்களேதாவது இருக்கத்தானே வேண்டும். அப்படியிருக்காதாவென்ன? உடனேயே ராகவனின் ஞாபகம் தோன்றியது. 'கடவுளே அவரை மாதிரி அவளைத் தறுதலையாக வளர்த்துப் போடாதே'யென்று மனம் வேண்டிக் கொள்ளவும் செய்தது. 'படைத்தவன் படியளக்காமலா போய் விடப் போகின்றான்' என்றும் பட்டது. 'நானும் தேவையில்லாமல் மனதைப் போட்டு அலட்டிக் கொண்டால் பிரச்சினை குறையவாப் போகுது' என்று நினைத்தவள் தன் உள்ளத்தை உறுதியாக்குவதில் முனைந்தாள்.

மகள் மேல் அளவிற்கதிகமாக வைத்திருக்கின்ற பாசம் தான் எல்லாவற்றிற்கும் காரணமென்று பட்டது. அவள் கண் கலங்குவதைக் கூட இவளால் பொறுத்துக் கொள்ள முடியாது-அவ்விதம் அவளை வளர்த்து வந்திருக்கின்றாள. அவள் எது கேட்டாலும் இவளால் மறுக்க முடியாது. மறுத்து குழந்தையின் முகம் வாடுவதைக் கண்டால் இவளால் தாங்க முடியாது. அன்று முழுக்க இவளிற்கு ஒன்றுமே ஓடாது. செல்லம் அப்பா இல்லாத குறையே தெரியாமல் வளர வேண்டுமென்று இவள் விரும்பினாள். ஏனைய அவளையொத்த பெண்கள் தங்களது தந்தைமாருடன் செல்லும் போது வாடும் பானுவின் முகம் இவள் நெஞ்சில் வேதனையைப் பெருக்கும்.பொம்மைகளை வேண்டுமானால் கடைகளில் வாங்கலாம். ஒரு பெண்ணுக்கு அப்பனை எங்கு போய் வாங்குவது?தந்தையின் அரவணைப்பிருக்க வேண்டிய வயதில் அதன் சுகம், இதம் தெரியாமல் குழந்தை வளர்ந்து வருகின்றாளே. இந்த இழப்பை எப்படி நிறைவு செய்வது?சுகுணாவின் நெஞ்சில் பால்ய காலத்து நினைவுகள் படம் விரித்தன. அதிகாலைப் பொழுதுகள், கோயில் , குளம், வயலென்று தந்தையுடன் திரிந்த அதிகாலைப் பொழுதுகள். இப்பொழுதும் எவ்வளவு ஆனந்தத்தைத் தருகின்றன. அந்த ஆனந்தத்தைக் குழந்தை இழந்து விட்டாளே. சுகுணாவென்றால் அவள் தந்தைக்கு உயிர்.அவளிற்காக எப்படியெல்லாம் அந்த ஆஜானுபாகுவான மனிதர் உருகிப் போவார். நினைக்கையிலேயே நெஞ்சு நெகிழ்ந்தது. 'பானு என்னை மன்னித்துக் கொள்ளம்மா'

கடந்த இரண்டு மூன்று நாட்களாகத் தான் சுகுணாவின் கவலை அதிகரித்து விட்டிருந்தது. அதற்குக் காரணமுமிருந்தது. சுகுணா வேலை முடிந்து வீடு சேரும் பொழுது மணி ஆறை நெருங்கி விடும். பானுவோ நான்கு மணிக்கெல்லாம் வீடு வந்து விடுவாள். இந்த இரண்டு மணித்தியாலங்களும் அவள் ஒரு சுதந்திரப் பறவை. அந்த சுதந்திரம் தான் சுகுணாவிற்குக் கவலையைத் தந்தது. அந்த சுதந்திரத்தைக் குழந்தை என்ன மாதிரிப் பாவிக்கின்றாளோ? நேற்று சுகுணா வீடு திரும்பியபொழுது பானு தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்தாள். கதைத்துக் கொண்டிருந்தவள் இவளைக் கண்டதும் அவசர அவசரமாக இணைப்பைத் துண்டித்தாள். அதைக் கவனிக்காத மாதிரிக் கவனித்தாள் சுகுணா. மகளிடம் தேவையற்ற கேள்விகள் கேட்டு ஏன் அவள் மனதைக் குழப்ப வேண்டும். அந்தக் கள்ளம் தான் மனதைப் போட்டுக் கிண்டிக் கொண்டிருந்தது. எதற்காக பானு தொலைபேசி இணைப்பை அவ்வளவு அவசரமாகத் துண்டிக்க வேண்டும்?இன்று எப்படியும் லிசா சொன்னது போல் மகளுடன் மனம் விட்டுக் கதைக்க வேண்டும். அதுவே நல்லதாகவும் பட்டது.

(தொடரும்...)

இரவி விளம்பரங்கள்

Golden Griddle

புலம்பெயர்ந்த தமிழர் சாதனைப் பாதையில் மற்றுமொரு மைல் கல்!
முற்று முழுதாகத் தமிழர் தம் நிர்வாகத்தின் கீழ்
கோல்டின் கிறிடில்



முதற் தடவையாக தமிழ், பல்லின மக்களுக்காக கோல்டன் கிறிடிில் பெருமையுடனவழங்கும்**GOLDEN SPICY DINNER BUFFET** (வெள்ளி, சனி, ஞாயிறு மட்டும் பிப 5.00 தொடக்கம் இரவு 11.00 வரை)

25க்கு மேற்பட்ட உணவு வகைகளுடன்...

சைனா ஸ்ரைல் பிரைட் றைஸ், சோறு, சிங்கப்பூர் நூாடில்ஸ், சௌமெயின், கொத்து ரொட்டி, பிரைட் சிக்கன், சிலி சிக்கன், மாட்டிறைச்சி, கோழியிறைச்சி, மரக்கறியுடன் **BBQ** சிக்கன், தண்டூரி சிக்கன், சிக்கன் விங்ஸ், கத்தரிக்காய்க் கறி, பருப்புக் கறி, கடலைக் கறி, சூப்ஸ், பழங்கள், புடிங், இன்னும் பலப் பல நாவுக்குச் சுவையூட்டும் உணவு வகைகள்..... **LLBO**

Buffet

Adult	**$8.99**
Child 5-10	**$4.99**
Child 2-4	**$1.99**
Child under 2 $ Free	



***Free gifts & Baloons for kids**
***Free magic show**



3090 Eglinto Avenue East (at Bellamy),Scarborough, Ontario
Tel: (416) 265 — 8429
Fax: (416) 265 — 6842